டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 19.09.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 077 | Madurai | Online Edition

கொப்பரைக்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை. தகவல்

கோயம்புத்தூர், செப்.18

இந்தியாவில் தேங்காய் ஒரு முக்கியமான தோட்டப் பயிராகும். இது லட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் வருமானப் பாதுகாப்பிற்கும் பங்களிப்பதோடு, பல்வேறு பதப்படுத்தும் தொழில்களுக்கும் ஆதரவளிக்கிறது. தேங்காய் உற்பத்தியில் இந்தியா உலகின் மிகப்பெரிய நாடாக திகழ்வதோடு மட்டுமல்லாமல் உலகளாவிய உற்பத்தியில் 30.37 சதவீதப் பங்களிப்பை வழங்குகிறது.

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் (2024-2025) இறுதி மதிப்பீடுகளின்படி, இந்தியாவில் 21.90 லட்சம் ஹெக்டேர் சாகுபடி பரப்பிலிருந்து 139.70 லட்சம் டன்கள் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாடு (43.04 லட்சம் டன்கள்), கர்நாடகா (37.76 லட்சம் டன்கள்), கேரளம் (35.43 லட்சம் டன்கள்) மற்றும் ஆந்திரப் பிரதேசம் (11.94 லட்சம் டன்கள்) ஆகிய நான்கு தென்னிந்திய மாநிலங்கள் முக்கிய உற்பத்தியாளர்களாக உள்ளன. மேலும் அவை நாட்டின் தேங்காய் உற்பத்தியில் 92 சதவீதப் பங்களிப்பை வழங்குகின்றன.

தமிழ்நாட்டில், தென்னை விவசாய வாழ்வாதாரம், கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் பல்வேறு பதப்படுத்தும் மற்றும் மதிப்புக் கூட்டும் தொழில்களுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. கடந்த 2024-2025 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 5.06 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இருந்து சுமார் 43.04 லட்சம் டன் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்கள் மாநிலத்தின் முக்கிய தேங்காய் உற்பத்தியாளர்களாகத் திகழ்கின்றன.

இந்தச் சூழலில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு ஆனைமலைச் சந்தைகளில் நிலவிய கொப்பரையின் 25 ஆண்டு கால விலைத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்து, ஒரு சந்தை ஆய்வை நடத்தியுள்ளது. இந்தப் பகுப்பாய்வு மற்றும் வர்த்தக ஆய்வின் முடிவுகளின்படி, அக்டோபர்'26-ல் நல்ல தரமான கொப்பரையின் விலை ஒரு கிலோவுக்கு சுமார் ரூ.145-150 ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தக வட்டாரங்களின்படி, வரவிருக்கும் பண்டிகைக் காலங்கள் கொப்பரைக்கான தேவையை அதிகரிக்கும் என்பதனால் விவசாயிகள் அதற்கேற்ப விற்பனை முடிவுகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சந்தைப்படுத்தல் தொடர்பான விவரங்களுக்கு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு, வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி : 0422-2431405, மின்னஞ்சல் : tndemic@gmail.com தொடர்பு கொள்ளலாம்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

கோவை, மதுரை, வேலூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் கனமழைக்கான வாய்ப்பு!

சென்னை, செப்.18

தமிழகத்தில் நீலகிரி, கோவை, மதுரை, வேலூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வட தமிழகத்தின் உள் பகுதி மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

மராத்வாடாவிலிருந்து தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகள் வரை, உள் கர்நாடகா மற்றும் கேரளாவில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (செப்.19) நீலகிரி, கோவை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, ராணிப்பேட்டை, விழுப்புரம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், வேலூர், கள்ளக்குறிச்சி, மதுரை ஆகிய 11 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேலும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், சேலம், ஈரோடு, நாமக்கல், பெரம்பலூர், அரியலூர், கரூர், புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை

கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

வகை வகையான சூப் தொடர்...

சூப் செய்வது எப்படி?

42. மிக்ஸ்டு ஹெர்ப்ஸ் சூப்

தேவையான பொருட்கள்

கொத்தமல்லி — ¼ கப்

புதினா — ¼ கப்

துளசி — 10 இலை

மிளகு — 1 டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

செய்முறை

கீரைகளை தண்ணீரில் கொதிக்கவைத்து வடிகட்டி மிளகு, உப்பு சேர்த்து பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

கண்டமங்கலம் வட்டாரம் V.அகரம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயிற்சி

விழுப்புரம், செப்.18

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், V.அகரம் கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் Dr. பால சுப்பிரமணியனின் தலைமையில் வேளாண்மை துறையில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் வேளாண் பொருட்களை மதிப்பு கூட்டுதல் மற்றும் இரண்டாம் நிலை வேளாண்மை பயிற்சி நடத்தப்பட்டது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேன்மொழி விவசாயிகளை வரவேற்றார். இப்பயிற்சிக்கு வேளாண்மை துணை இயக்குனர் வேளாண் வணிகம் சுமதி கலந்து கொண்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட் களாக மாற்றி விற்பனை செய்வது மூலம் கூடுதல் வருமானம் பெறலாம் என கூறினார். வேளாண்மை அலுவலர் விஜய் பயறு வகை பயிர்களை முக்கியத்துவத்தை எடுத்து கூறினார். மேலும் மண் மாதிரிகளில் எடுத்தல் மண்ணில் உள்ள நுண்ணுயிரி களின் பயன்பாடு குறித்தும் பசுந்தாள் உரம் விதைப்பதின் அவசியம் பற்றியும் மண் மாதிரி எடுத்து அதற்கு ஏற்றது போல் உரம் இடுதல் பற்றியும் விரிவாக கூறினார்.

மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை வேளாண்மை அலுவலர் அருண்குமார் கலந்து கொண்டு வேளாண் விற்பனைத் துறை திட்ட பணிகள் குறித்தும் வேளாண் விளை பொருளை சந்தைப்படுத்துதல் உழவர் சந்தை பற்றியும் விரிவாக கூறினார். இப்பயிற்சியில் முன்னோடி விவசாயி முருகையன் மற்றும் பல விவசாயிகள் கலந்து கொண்டனர். உதவி தொழில் நுட்ப மேலாளர் அருள்பாபு நன்றி கூற, பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் வீரமணி செய்திருந்தார்.

பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த உள் மாநில அளவிலான கண்டுனர் பயணம்

மதுரை, செப்.18

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 2026-27, மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி, சேடப்பட்டி மற்றும் கள்ளிக்குடி வட்டாரத்தில் இருந்து இரண்டு நாட்கள் கண்டுனர் பயணமாக பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர், டாக்டர் ஜோதிமணி பேராசிரியர் மற்றும் தலைவர் மண் பரிசோதனை செய்யும் முறைகள் பற்றியும் மண் எடுக்கும் விதம் பற்றியும் அதனுடைய நன்மை தீமைகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார். ராம்குமார், பூச்சிகள் துறை பேராசிரியர், பருத்தியில் தாக்கக்கூடிய பூச்சிகள் மற்றும் நோய்கள் பற்றியும் அதனை கட்டுப்படுத்தும் விதங்கள் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறினார் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டை, கிருஷ்ணகுமார் தொழில்நுட்ப வல்லுநர் மண்ணியல் துறை மண்வளத்தை மேம்படுத்தக்கூடிய அசோஸ்பைரில்லம் ரைசோபியம் உயிர் உரங்கள் பயன்படுத்த விதங்கள் குறித்தும், விதை நேர்த்தி செய்யும் முறைகள் குறித்தும், பூச்சிகளை கட்டுப்படுத்தும் இயற்கை வழி முறைகள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர் மாரிமுத்து பயிற்சி ஏற்பாடு களை செய்திருந்தார். பயிற்சி முடிவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கணேஷ் ராஜா நன்றி கூறினார்.

காலநிலைக்கேற்ற புதுமையான அணுகுமுறைகள் மூலம் குறைந்த உமிழ்வு கொண்ட நெல் சாகுபடியை மேம்படுத்துதல் தொடர்பான சர்வதேசப் பயிலரங்கு

கோயம்புத்தூர், செப்.18

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் கீழ் செயல்படும் சுற்றுச்சூழல் அறிவியல் துறை மற்றும் சிங்கப்பூரைச் சேர்ந்த

டெமாசெக் உயிர் அறிவியல் ஆய்வகம் (TLL) இணைந்து, காலநிலைக்கேற்ற புதுமையான அணுகுமுறைகள் மூலம் குறைந்த உமிழ்வு கொண்ட நெல் சாகுபடியை மேம்படுத்துதல் என்ற தலைப் பில் சர்வதேசப் பயிலரங்கு 17 செப்டம்பர் 2026 அன்று நடைபெற்றது. இந்தப் பயிலரங்கு, விஞ்ஞானிகள், ஆராய்ச்சி-யாளர்கள், வேளாண் வல்லுநர்கள் மற்றும் பங்கு தாரர்கள் ஒன்றிணைத்து, அறிவைப்பரிமாறிக் கொள்ளவும், நிலையான, காலநிலைக்கேற்ற குறைந்த பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வு கொண்ட நெல் சாகுபடிக்கான புதுமையான அணுகு முறைகளைப் பற்றி விவாதிக்கவும் வழிவகுத்தது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவரான முனைவர் ப.முரளி அர்த்தநாரி வரவேற் புரையாற்றினார். சுற்றுச்சூழல் அறிவியல் துறையின் பேராசிரி யரும் தலைவருமான முனைவர் அ.பரணி, காலநிலைக்கேற்ற மற்றும் குறைந்த உமிழ்வு கொண்ட நெல் சாகுபடியை மேம் படுத்துவது குறித்த தனது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

இயற்கை வள மேலாண்மை இயக்குநரான முனைவர் சு.கார்த்திகேயன், நிலையான நெல் உற்பத்தியின் முக்கிய அம்சங்களைப் பற்றி எடுத்துரைத்தார். பயிர் மேலாண்மை இயக்குநரகத்தின் இயக்குநரான முனைவர் செ.பழனிவேலன், நெல் சாகுபடியில் காலநிலைக்கேற்ற அணுகுமுறைகளை வலுப்படுத்துவது குறித்த தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பொறுப்பு துணைவேந்தர் மற்றும் பதிவாளரான முனைவர் மு.ரவீந்திரன், குறைந்த பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வு மற்றும் நிலையான நெல் உற்பத்தி முறைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி தொடக்கவுரை ஆற்றினார். தொழில்நுட்ப அமர்வுகள், குறைந்த பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வு, நெல் சாகுபடியின் முக்கிய அறிவியல் மற்றும் கள அளவிலான அம்சங்களில் கவனம் செலுத்தின. TLL நிறுவனத்தின் திட்டத்தலைவர் முனைவர் சீனிவாசன் ராமச்சந்திரன், ஆசியா முழுவதும் காலநிலைக்

கேற்ற நெல் சாகுபடி முறைகளை விரிவுபடுத்துவதற்கான தொலைநோக்குப் பார்வையை எடுத்துரைத்தார்.

நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் முனைவர் எ.பரமேஸ்வரி, பருத்திக்கோட்டையில் 100 ஹெக்டேர் பரப்பளவில் நடத்தப்பட்ட பருவக்கால சோதனைகளின் முடிவு களை, வேளாண் செயல்திறன், மீத்தேன் வாயு குறைப்பு மற்றும் நெல் சாகுபடி ஆகியவற்றை எடுத்துரைத்தார்.

மண் நுண்ணுயிரி களின் இடைவினைகள் மற்றும் நெல் சாகுபடியில் குறைந்த பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு குறித்த முக்கியத்துவத்தை விளக்கினார். இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் பேராசிரியர் முனைவர் வீ.தவமணி, TLL நிறுவனத்தின் விஞ்ஞானியும் முதன்மை வேளாண் வல்லுநருமான முனைவர் கின்ஸ்வர்கீஸ், ஒப்பீட்டு வேளாண்-காலநிலை முடிவுகளையும், வீஸிஸி நிறுவனத்தின் செயல்முறைத் தொகுப்பையும் முன் வைத்தார்.

TLL-இன் திட்ட மேலாளரான முனைவர் கோபுவேயீ, நிறுவனக் கூட்டாண்மைகள் மற்றும் TNAU-இன் விரிவாக்க அமைப்பு ஆகியவற்றை எடுத்துரைத்தார். முன்மொழியப்பட்ட தொழில் நுட்பங்கள், செயல்படுத்தப்படவுள்ள இடங்கள் மற்றும் ஒப்புதல் நடைமுறைகள் குறித்து முனைவர் பெ.கலைசெல் மற்றும் முனைவர் செ.பவுல் செபாஸ்டியன் ஆகியோர் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் விளக்கினர்.

மேலும், கேட்ஸ் அறக்கட்டளையின் வேளாண் மேம்பாட்டுத் துணை இயக்குநரான முனைவர். ஸ்ரீவல்லிகிருஷ்ணன், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவது மற்றும் சாத்தியமான ஒத்துழைப்பு குறித்த தனது கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியின் வட்ட மேசை கலந்துரையாடலில், எதிர்கால ஆராய்ச்சி திட்டங்கள், விரிவாக்கப் பாதைகள், சவால்கள், நிறுவன ஒத்துழைப்பு, நிதி வாய்ப்புகள் மற்றும் தொடர்ச்சியான TNAU-TLL ஒத்துழைப்புக்கான ஒரு செயல்திட்டம் ஆகியவை விவாதிக்கப்பட்டன. முனைவர் சீனிவாசன் ராமச்சந்திரன் மற்றும் முனைவர் ஸ்ரீவல்லிகிருஷ்ணன் ஆகியோரின் கருத்துக் களுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது, அதனைத் தொடர்ந்து டாக்டர் செ.பவுல் செபாஸ்டியன் நன்றியுரை வழங்கினார்.

இரண்டு பருவங்களில் 100 ஹெக்டேர் பரப்பளவில் பெறப்பட்ட கள அளவிலான முடிவுகள், TLL உரக்கலவை, பாய்ச்சலும் காய்ச்சலும் நீர்ப்பாசன முறை + TLL உரக்கலவை + மீத்தேனைப் பயன்படுத்தும் நுண்ணுயிரிக் கலவை + பருவத்திற் கேற்ற நெல் ரகங்கள் ஆகியவற்றின் தாக்கத்தை வெளிப் படுத்தின. இது வழக்கமான விவசாயிகளின் நடைமுறைகளுடன் ஒப்பிடும் போது 20% மகசூல் அதிகரிப்பையும், 369.4 டன் CO_2 சமமான உமிழ்வைக் குறைப்பதுடன், காலநிலைக்கேற்ற நெல் சாகுபடிக்காக அவற்றை விரிவுபடுத்துவதற்கும் ஆதரவளித்தது. குறைந்த பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வு கொண்ட நெல் சாகுபடிக்காக, அறிவியல் கண்டுபிடிப்புகளை நடைமுறைக்கு உகந்த, பொருளாதார ரீதியாக சாத்தியமான மற்றும் விவசாயி களுக்கு உகந்த வழிமுறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கான மதிப்புமிக்க ஆலோசனைகளை இந்தப் பயிலரங்கம் வலியுறுத்தியது.

அட்மா திட்டத்தின் கீழ் மண் நல மேலாண்மை என்ற தலைப்பில் விவசாயிகளுக்கு பயிற்சி

சேலம், செப்.18

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் உள்மாவட்டளவிலான விவசாயிகள் பயிற்சி A.குமார பாளையம் கிராமத்தில் 18.09.26 அன்று நடைபெற்றது. விஜயகுமார், உதவி தோட்டக்கலை அலுவலர், வேளாண் மற்றும் தோட்டக் கலை நலத்திட்டங்கள், நுண்ணுயிர் பாசன திட்டம் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் பயிற்சியாளர் பிரவீன், மண் மாதிரி பரிசோதனை, மண் நல மேலாண்மை, சமச்சீர் உரப்பயன்பாட்டு முறைகள், இயற்கை உரங்கள் பயன்படுத்துவதால் வரும் நன்மைகள், மண் மாதிரி எடுக்கும் முறையை பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார். ராஜ்குமார், உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆத்மா திட்டம் மற்றும் பயிர் காப்பீட்டு திட்டம் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர் களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா பணியாளர் பிரியங்கா செய்திருந்தார்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் – நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் – ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் – தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் – அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING – விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் – ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)	ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)	ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)	ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)	ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

மூங்கில் பயன்பாடு-ஒரு பார்வை

மூங்கில் ஒரு சாதாரணமான தாவரம் போல தெரிந்தாலும் அதனுடைய பயன்பாடுகள் ஏராளம். வேகமாக வளரக்கூடிய தாவரங்களில் ஒன்றாக மூங்கில் உள்ளது. மனிதர்களின் பொருளாதார மேம்பாட்டிலும் சுற்றுப்புற சூழல் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. வீடு கட்டுவது முதல் பல்வேறு கைவினை பொருட்கள் தயாரிப்பது வரை மூங்கில் பயன்படுகிறது.

உலக மூங்கில் தினம்

இதனுடைய சிறப்பை உலகம் முழுவதும் ஏற்படுத்துவதற்காகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அதனுடைய பயன்பாட்டை ஊக்குவிக்கவும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 18ம் தேதி (நேற்று) உலக மூங்கில் தினமாக கொண்டாடப்பட்டது.

2009 ஆம் ஆண்டு தாய்லாந்தில் நடைபெற்ற 8வது உலக மூங்கில் மாநாட்டின் போது இந்த தினம் அறிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் மூங்கில் சாகுபடி

தமிழகத்தில் முள் மூங்கில், முள் இல்லாத மூங்கில் என இரண்டு வகை சாகுபடி செய்யப்படுகிறது. முள் மூங்கிலில் கெட்டி மூங்கில், பொந்து மூங்கில் (துட்டை மூங்கில்) சாகுபடி செய்யப்படுகிறது. தட்டை மூங்கிலில் அதிகமாக முள் இருக்கும் கெட்டி முங்கில் அதிகமாக முள் இருக்காது. மூங்கில் ஒரு நீண்ட கால பயிர். ஒரு முறை நட்டு விட்டால் 30, 40 வருடங்கள் வரை மகசூல் தரக்கூடியது. மூங்கில் கிழங்கிலிருந்து குருத்துகள் ஆண்டுதோறும் வருவதால் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மகசூல் குறைய வாய்ப்பில்லை.

மூங்கிலின் சுற்றுச்சூழல் பொருளாதார மற்றும் சமூக பயன்களை மக்களிடம் கொண்டு செல்ல உலக மூங்கில் அமைப்பு முன்னெடுத்து வருகிறது குறிப்பிடத்தக்கது.

இயற்கையிலும் சமூகத்திலும் மூங்கில் ஏன் முக்கியத்துவம்?

1) மூங்கில் வேகமாக வளரும் தாவரமாக இருப்பதுடன் புதுப்பிக்க கூடிய இயற்கை வளமாகவும் விளங்குகிறது.

2) பிற மரங்களை விட 35% அதிகமான ஆக்ஸிஜனை வெளியிடும் தன்மை மூங்கிலுக்கு உண்டு.

3) வீடுகளில் மரச்சாமான்கள் கைவினைபொருட்கள் இசைக் கருவி உள்பட பல பொருட்கள் மூங்கில் கொண்டு தயாரிக்கப் படுகிறது.

4) மண்ணை வளமாக வைத்துக்கொள்ள உதவுகிறது மூங்கில் இலைகள்.

ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் பச்சை தங்கமான மூங்கில் உள்ளது என்பதை நினைவுபடுத்துவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பெண் விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி

மதுரை, செப்.18

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில், ஐக்கிய நாடுகள் சபையால் 'சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டாக' அறிவிக் கப்பட்டுள்ள 2026-ம் ஆண்டை சிறப்பிக்கும் வகையில், அசோலா மற்றும் தீவனப்புல் உற்பத்தி, ஹைட்ரோபோனிக்ஸ் முறை குறித்த செயல்முறை விளக்கப் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்க இயக்குநர் முனைவர் பி.பொ.முருகன், தொடங்கி வைத்தார். அப்போது அவர், வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பில் பெண்களின் பங்களிப்பு குறித்து விரிவாக உரையாற்றி, பெண் விவசாயிகளை கௌரவித்தார்.

வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கி.சுரேஷ், வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து, கால்நடை மருத்துவர் செ.சரவணன், அசோலா உற்பத்தி செய்யும் முறை, தீவனப்புல் சாகுபடி மற்றும்

அதன் பயன்கள், ஹைட்ரோபோனிக்ஸ் முறையில் தீவனம் வளர்க்கும் தொழில்நுட்பம் குறித்து செயல்முறை விளக்கமளித்தார்.

மேலும், கால்நடை தீவனம் அரைக்கும் இயந்திரம், பாலில் இருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் இயந்திரம், உலர் பழங்கள் தயாரிக்கும் இயந்திரம் ஆகியவற்றின் செயல் பாடுகள் குறித்தும், கோழி வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்தும் தொழில்நுட்ப உரைகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சியில் 30-க்கும் மேற்பட்ட பெண் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

ஆராய்ச்சியை வணிகப் பொருட்களாக மாற்றும் PPP முறையிலான தொழில்நுட்ப வளர்ச்சியை ஆராய்ந்த சர்வதேச கல்வியியல் பிரதிநிதிகள் COXBIT-க்கு வருகை

கோயம்புத்தூர், செப்.18

கொரிய குடியரசின் Daejeon, Seo-gu பகுதியில் உள்ள Konyang University–யின் Institute of Educational Innovation, Department of Medical IT Engineering இயக்குநர் பேராசிரியர் Song Ki Won மற்றும் கோயம்புத்தூர் Sri Shakthi Institute of Engineering and Technology (Autonomous)–ன் தலைவர் முனைவர் S.தங்கவேலு ஆகியோர், கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் Centre of Excellence in Biotechnology (COXBIT)–க்கு வருகை தந்தனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரும் பொறுப்பு துணைவேந்தருமான முனைவர் மு.ரவீந்திரன், பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தார். பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்கள், தொழில்நுட்பப் புத்தாக்கங்கள் மற்றும் தொழில்துறை மற்றும் பிற நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் அவர் எடுத்துரைத்தார். இந்த வருகையின் போது, COXBIT உடன் இணைந்து செயல்பட்டு வரும் நிறுவனங்களின் ஆராய்ச்சி, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் புத்தாக்க நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினர்.

Home Idea Technologies நிறுவனத்தின் நிறுவனர், செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான குரல் வழிக் கல்வி பயன்பாடு களுக்கான (Voice-Assisted Educational Applications) தயாரிப்பு மேம்பாடுகுறித்த தங்களது ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பணிகளை விளக்கினார். கல்வித் துறையில் குரல் வழித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி AI அடிப்படையிலான தீர்வுகளை உருவாக்கும் பணிகள் குறித்து அவர் எடுத்துரைத்தார்.

Nithilam Tech நிறுவனம், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திரக் கற்றல் (ML) அடிப்படையிலான பயிர் ஆலோசனைத்

தீர்வுகள் மற்றும் ட்ரோன் மூலம் வேளாண் படங்களைப் பகுப்பாய்வு செய்யும் தொழில்நுட்பம் குறித்து விளக்கியது. வேளாண் படங்களை AI/ML மாதிரிகள் மூலம் பகுப்பாய்வு செய்து, பயிர் சார்ந்த முடிவெடுப்புகளுக்கு உதவும் தொழில்நுட்ப மேம்பாடுகள் குறித்து நிறுவனம் எடுத்துரைத்தது.

Coimbatore AI நிறுவனம், வேளாண்மையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தயாரிப்பு மேம்பாட்டுப் பணிகள் குறித்து விளக்கியது. இத்துறைகளில் AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டு வரும் தீர்வுகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

MittiLifetekPharmadx Private Limite என்ற உயிரித் தொழில் நுட்ப தொடக்க நிறுவனம், காசநோய் (Tuberculosis – TB) கண்டறிதலுக் கான மூலக்கூறு நோயறிதல் (Molecular Diagnostics) தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை விளக்கியது. TB–க்கான மூலக்கூறு நோயறிதல் கருவியின் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நோயைக் கண்டறிவதில் அதன் பயன்பாடு குறித்து நிறுவனத்தின் குழுவினர் விளக்கமளித்தனர்.

இந்த கலந்துரையாடல்கள் மூலம், COXBIT சூழலமைப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்கை நுண்ணறிவு, வேளாண்மை, குரல் வழிக் கல்வி, ட்ரோன் அடிப்படையிலான படப் பகுப்பாய்வு, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் மூலக்கூறு நோயறிதல் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நடவடிக்கைகள் எடுத்துக்காட்டப்பட்டன.

COXBIT, TNAU இயக்குநர் முனைவர் ந.செந்தில் COXBIT–ன் நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கினார். Public–Private Partnership (PPP) முறையின் மூலம் கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறைக்கு இடையேயான இணைப்பை (Academia–Industry Connect) வலுப்படுத்துவது COXBIT–ன் முக்கிய நோக்கங் களில் ஒன்றாகும் என்று தெரிவித்தார்.

கல்வி நிறுவனங்கள், தொழில்துறை நிறுவனங்கள், தொடக்க நிறுவனங்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் புத்தாக்க சிந்தனையாளர்களை ஒருங்கிணைத்து, கூட்டு ஆராய்ச்சி, தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் புத்தாக்கத்தை முன்னெடுப்பதற்கான தளமாக COXBIT செயல்பட்டு வருவதாக அவர் விளக்கினார்.

மேலும், ஆராய்ச்சி மற்றும் Proof-of-Concept நிலையிலிருந்து தொழில்நுட்ப சரிபார்ப்பு, தயாரிப்பு மேம்பாடு மற்றும் வணிகமய மாக்கல் வரை புதுமையான யோசனைகளை முன்னெடுத்துச்

செல்ல ஆய்வக வசதிகள், தொழில்நுட்ப நிபுணத்துவம், இன்கு பேசன் ஆதரவு மற்றும் தேவையான பிற வசதிகளை COXBIT வழங்கி வருவதாக முனைவர் ந.செந்தில் தெரிவித்தார்.

PPP முறையின் மூலம் கல்வி நிறுவனங்களில் உருவாகும் ஆராய்ச்சி முடிவுகளுக்கும் தொழில்துறையின் தேவைகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்து, ஆராய்ச்சி முடிவுகளை தொழில்நுட்ப அடிப்படையிலான மற்றும் வணிக ரீதியாகச் செயல்படுத்தக்கூடிய தயாரிப்புகளாக மாற்றுவதற்கு COXBIT வழிவகுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாம்பழத்தின் உடலியல் குறைபாடுகள் குறித்த செயல்விளக்கம்

தென்காசி, செப்.18

கிராமப்புற தோட்டக்கலைப் பணியனுபவத் திட்டத்தின் (Rural Horticultural Work Experience – RHWE) ஒரு பகுதியாக, மாம்பழத்தில் ஏற்படும் உடலியல் குறைபாடுகள் குறித்த செயல்விளக்கம் நாராணாபுரத்தில் நடத்தப்பட்டது. மாம்பழ உற்பத்தி மற்றும் பழங்களின் தரத்தைப் பாதிக்கும் முக்கியமான உடலியல் குறைபாடுகள் குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

இந்நிகழ்ச்சியின் மூலம், மாம்பழத்தில் ஏற்படும் முக்கியமான உடலியல் குறைபாடுகளை அடையாளம் காணுதல், அவற்றின் அறிகுறிகள், ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் மற்றும் பழங்களின் தரத்தை மேம்படுத்தி, உகந்த உற்பத்தித் திறனைப் பராமரிப்பதற்கான பொருத்தமான மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு நடைமுறை விளக்கங்கள் வழங்கப்பட்டன.

மேலும், உள்ளூர் விவசாய சமூகத்தினருடன் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்வு, அறிவுப் பரிமாற்றத்திற்கும், வயல்வெளியில் விவசாயிகள் எதிர்கொள்ளும் நடைமுறை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

இந்நிகழ்ச்சியை M.அபர்ணா உன்னிதன், ககானி ரசக்னா, கார்த்திகாஸ்ரீ M. மற்றும் G.அனிதா ஆகியோர், பாடநெறி ஆசிரியர் டாக்டர் S.விஜயகுமார் மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் V. விஜய பிரபா ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் நடத்தினர். இந்நிகழ்ச்சிக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் P.ராஜா தேவையான ஆதரவை வழங்கினார்.

காமக்காபாளையம் கிராமத்தில் மக்காச்சோள சாகுபடி பண்ணைப்பள்ளி பயிற்சி

சேலம், செப்.18

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், காமக்காபாளையம் கிராமத்தில் அட்மா (ATMA) திட்டத்தின் கீழ் மக்காச்சோள சாகுபடி குறித்த நான்காம் வகுப்பு பண்ணைப்பள்ளி பயிற்சி சிறப்பாக நடத்தப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் தலைமை தாங்கிய இப்பயிற்சியில், வேளாண்மை அலுவலர் ஜானகி சிறப்புப் பருவ பயிர் காப்பீடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்காச்சோளத்திற்கு ஏக்கருக்கு ரூ.491/-, பருத்திக்கு ரூ.691/-, நெல்லுக்கு ரூ.580/- செலுத்தி விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார். தொடர்ந்து, பயிற்சியாளர் வெங்கடாசலம் மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி ஆகியோர் மக்காச்சோள அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி மற்றும் அறுவடை தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் ரவிக்குமார் பேசுகையில், வட்டாரத்தில் விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் மற்றும் இடுபொருட்கள் போதுமான அளவு இருப்பில் உள்ளதாகத் தெரிவித்தார். அதன்படி, நெல் ரகங்கள் (ADT 57-300 கி, கோ 55-7930 கி, ADT 45-5300 கி, வெள்ளைப் பொன்னி-1470 கி, கோ 56-200 கி, மக்காச்சோளம் ADVANTA 752-3000 கி, சோளம் CSV 43-2797 கி, குதிரைவாலி 245 கி, உளுந்து (வம்பன் 10, 11-8150 கி, துவரை TDRG 59-110 கி, நிலக்கடலை Girnar 5- 650 கி மற்றும் சிறுதானிய, நிலக்கடலை, பயறுவகை நுண்ணூட்டங்கள், உயிர் உரங்களான அசோஸ்பைரிலம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஸ் பாக்டீரியா ஆகியவை இருப்பு உள்ளன என்றார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரமேஷ் மற்றும் முத்துவேல் செய்திருந்தனர். இப் பண்ணைப்பள்ளி பயிற்சியில் 25-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)	ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)	ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)	ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)	ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி மற்றும் இடுபொருட்கள் வழங்கும் விழா

கள்ளக்குறிச்சி, செப்.18

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டாரம், காளசமுத்திரத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் 2026 -27 ஆம் ஆண்டிற்கான தொகுப்பு முன்னிலை செயல் விளக்க திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த நிலக்கடலை சாகுபடி மேலாண்மை குறித்த பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சிக்கு வேளாண் அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கண்ணதாசன், தலைமையேற்று முன்னிலை செயல் விளக்கத் திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் சிறப்புகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் நிலக்கடலை கொடிகளை தீவனமாக பயன்படுத்தும் முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். உழவியல் தொழில்நுட்ப வல்லுநர் மகேஸ்வரன், வி ஆர் ஐ 10 நிலக்கடலை ரகத்தின் சிறப்பியல்புகள், நிலம் தயாரித்தல், விதை நேர்த்தி மற்றும் பூச்சி மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். பண்ணை மேலாளர் முனைவர் ஸ்ரீமதி, நிலக்கடலையில் ஒருங்கிணைந்த களை மேலாண்மை முறைகள் ஊட்டச்சத்து மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். இந்நிகழ்ச்சியில் ஒரு பகுதியாக எல் நினோ வெப்ப தாக்கத்தில் நிலக்கடலை உள்ளிட்ட எண்ணெய் வித்துப் பயிர்களை பராமரிப்பதற்கான தொழில் நுட்பங்களான விதை கடினப்படுத்துதல் நிலக்கடலை ரிச் தெளித்தல் பி பி எஃப் எம் பயன்படுத்துதல் பயன்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

பயிற்சியில் கலந்து கொண்டோருக்கு நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி கையேடு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக வி ஆர் ஐ 10 என்ற நிலக்கடலை ரகம் தொகுப்பு முன்னிலை செயல் விளக்கத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இப்கோ விவசாயிகள் கருத்தரங்கம்

திருவண்ணாமலை, செப்.18

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், குப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு, அவரது 25 ஆண்டு கால பொது சேவையை நினைவு கூரும் வகையில் விவசாயிகள் கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இப்கோ தமிழ்நாடு மாநில விற்பனை மேலாளர் ந.சுரேஷ், தலைமையில் நடைபெற்றது. மேலும் குப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர் சேகர், விவசாயிகள் சங்கத் தலைவர் ஞானவேலன் மற்றும் இப்கோ கள அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த தகவல்களை வழங்கினர்.

நிகழ்ச்சியில் பேசிய ந.சுரேஷ், பிரதமரின் விவசாய செழுமை மையம் மூலம் விவசாயிகளுக்கு உரங்கள், விதைகள், மண் பரிசோதனை மற்றும் வேளாண் ஆலோசனைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் ஒரே இடத்தில் கிடைப்பது குறித்து விளக்கமளித்தார்.

மேலும், சமச்சீர் உரப்பயன்பாடு, மண் வளப் பாதுகாப்பு மற்றும் பயிர் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வுஏற்படுத்தப்பட்டது. குறிப்பாக, நெல் சாகுபடியில் இப்கோ நானோ யூரியா பிளஸ் மற்றும் இப்கோ நானோ டி.ஏ.பி. ஆகியவற்றின் பயன்பாடு, அவற்றின் பயன்கள், சரியான பயன்பாட்டு முறைகள் மற்றும் அறிவியல் அடிப்படையிலான உர மேலாண்மை குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

ஒரே பயிரை தொடர்ந்து சாகுபடி செய்வதைத் தவிர்த்து, நிலத்தின் தன்மை, நீர் இருப்பு மற்றும் பருவ நிலைக்கு ஏற்ப

மாற்றுப் பயிர்கள் மற்றும் பயிர் சுழற்சி முறைகளை விவசாயிகள் கடைப்பிடிப்பதன் அவசியமும் எடுத்துரைக்கப் பட்டது. பயிர் சுழற்சி முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மண் வளத்தைப் பாதுகாப்பதுடன், நிலையான வேளாண்மை மற்றும் சிறந்த உற்பத்தியை மேம்படுத்த முடியும் என விளக்கப்பட்டது.

கருத்தரங்கில் விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்று, நானோ உரங்கள், உர மேலாண்மை, பயிர் சாகுபடி முறைகள் மற்றும் பிரதமரின் விவசாய செழுமை மைய சேவைகள் தொடர்பான தங்களது கேள்விகளை முன் வைத்தனர். அவர்களின் கேள்வி களுக்கு விளக்கமான பதில்கள் வழங்கப்பட்டன.

குளிர்சாதனச் சங்கிலி வசதிகள் இல்லாமையால் ஏற்படும் வேளாண் விளைபொருள் இழப்புகள்

அறிமுகம்

இந்தியாவில் பழங்கள், காய்கறிகள் மற்றும் மலர்கள் போன்ற அழுகக்கூடிய வேளாண் விளைபொருட்களின் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஆனால், அறுவடைக்குப் பிறகு அவற்றை சரியான வெப்பநிலையில் சேமித்து, சந்தைக்கு கொண்டு செல்லும் குளிர்சாதனச் சங்கிலி வசதிகள் போதுமான அளவில் இல்லாததால் கணிசமான அளவு விளைபொருட்கள் வீணாகின்றன. அறுவடை செய்தவுடன் பழங்கள் மற்றும் காய்கறிகளில் சுவாசம், நீரிழப்பு, பழுக்குதல் மற்றும் நுண்ணுயிர் தாக்குதல் போன்ற செயல்முறைகள் வேகமாக நடைபெறுகின்றன. அதிக வெப்பநிலையில் இச்செயல்கள் மேலும் வேகமடைவதால் விளைபொருளின் தரமும் சேமிப்பு ஆயுளும் குறைகின்றன. ICAR-ன் சமீபத்திய தகவலின்படி, இந்தியாவில் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் பல்வேறு வேளாண் பொருட்களில் சுமார் 6-18% வரை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குளிர்சாதனச் சங்கிலி என்றால் என்ன?

விளைபொருள் அறுவடை செய்யப்படும் இடத்திலிருந்து நுகர்வோர் அல்லது பதப்படுத்தும் நிலையத்தை அடையும் வரை, அதற்குத் தேவையான குறைந்த மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வெப்ப நிலையை தொடர்ந்து பராமரிக்கும் முழுமையான அமைப்பே குளிர்சாதனச் சங்கிலி ஆகும். இதில், அறுவடை - முன்-குளிரூட்டல் - தரப்படுத்துதல் - குளிர்சாதனக் கிடங்கு - குளிரூட்டப்பட்ட போக்குவரத்து - சந்தை - நுகர்வோர் என்ற தொடர் செயல்பாடுகள் அடங்குகின்றன. ஒரு கட்டத்தில் கூட குளிரூட்டல் தடைப்பட்டால், விளைபொருளின் தரம் விரைவாகக் குறையக்கூடும். எனவே குளிர்சாதனச் சங்கிலி என்பது ஒரு குளிர்சாதனக் கிடங்கு மட்டும் அல்ல; அறுவடைக்குப் பிந்தைய முழு விநியோகத் தொடரையும் உள்ளடக்கியது.

குளிர்சாதன வசதிகள் இல்லாததால் ஏற்படும் இழப்புகள்

குளிர்சாதன வசதிகள் இல்லாதபோது விளைபொருட்கள் நீண்ட நேரம் அதிக வெப்பநிலையில் இருப்பதால் நீர்ச்சத்து இழப்பு ஏற்படுகிறது. இதனால் காய்கறிகள் வாடி, எடை குறைகின்றன. பழங்களில் அதிகப்படியான பழுக்குதல், மென்மையாதல் மற்றும் பூஞ்சை வளர்ச்சி ஏற்படலாம். தக்காளி, மாம்பழம், வாழைப்பழம், திராட்சை, வெள்ளரி, கீரைகள் போன்ற பொருட்கள் குறிப்பாக வெப்பநிலைக்கு அதிக உணர்திறன் கொண்டவை. இவற்றை சரியான வெப்பநிலையில் பராமரிக்க முடியாவிட்டால் விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதனால் இரண்டு வகையான இழப்புகள் ஏற்படுகின்றன :

நேரடி இழப்பு – விளைபொருள் அழுகி அல்லது சேதமடைந்து வீணாகுதல்.

பொருளாதார இழப்பு – தரம் குறைவதால் விவசாயிக்கு குறைந்த விலை கிடைத்தல்.

தமிழ்நாட்டின் நிலை

தமிழ்நாட்டில் பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான குளிர் குசாதனச் சங்கிலியை மேம்படுத்து வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் தகவலின்படி, மாநிலத்தில் 111 குளிர்சாதனக் கிடங்குகள் உருவாக்கப்பட்டு, அவற்றின் மொத்த கொள்ளளவு 13,565 மெட்ரிக் டன் ஆக உள்ளது. மேலும், முதன்மை பதப்படுத்தும் மையங்களில் 3,908 மெட்ரிக் டன் மற்றும் உழவர் சந்தைகளில் 54 மெட்ரிக் டன் குளிர்சாதன வசதி உள்ளது. இவற்றைச் சேர்த்து மாநிலத்தின் குறிப்பிடப்பட்ட மொத்த குளிர்சாதனக் கொள்ளளவு 17,527 மெட்ரிக் டன் ஆகும்.

தமிழ்நாடு விநியோகச் சங்கிலித் திட்டம் – ஒரு முக்கிய முயற்சி

தமிழ்நாட்டில் பழங்கள், காய்கறிகள் மற்றும் பிற அழுகக்கூடிய பொருட்களின் சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதற்காக Tamil Nadu Supply Chain Management (TNSCM) Project செயல்படுத்தப் பட்டுள்ளது. இந்தத் திட்டம் கிருஷ்ணகிரி, தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தேனி,

இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களை உள்ளடக்கியது. திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.482.36 கோடி என தமிழ்நாடு வேளாண் விற்பனைத் துறை குறிப்பிடுகிறது. மேலும், 64 முதன்மை பதப்படுத்தும் மையங்களில் குளிர்சாதனக் கிடங்கு சுத்தம் செய்தல், தரப் படுத்துதல் மற்றும் பொதியிடுதல் போன்ற வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இதன் மூலம் விவசாயிகள் விளைபொருட்களை அறுவடை செய்த உடனேயே குறைந்த விலைக்கு விற்க வேண்டிய கட்டாயத்தை ஓரளவு குறைக்க முடியும்.

சமீபத்திய வழக்குக் கள ஆய்வு – குறைந்த செலவு குளிர்சாதன சேமிப்பு

ICAR–Central Institute of Agricultural Engineering, Bhopal உருவாக்கிய குறைந்த செலவு, குறைந்த ஆற்றல் பயன்பாட்டிலான ஆவியாதல் குளிர்விப்பு சேமிப்பு அமைப்பு சிறு விவசாயிகளுக்கு பயனுள்ள ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. இந்த அமைப்பு அதிகபட்ச கோடைக்கால வெப்பநிலையான 40–45°C நிலையிலிருந்து சேமிப்பு அறையின் காற்று வெப்ப நிலையை சுமார் 18.3°C வரை குறைக்க முடிந்ததாக ICAR தெரிவித்துள்ளது.

சோதனைகளில் வெள்ளரி, மாம்பழம் மற்றும் தக்காளி போன்ற பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றின் சேமிப்பு ஆயுள் சாதாரண சூழ்நிலையுடன் ஒப்பிடும் போது 4 – 5 மடங்கு வரை அதிகரித்தது. மற்றொரு ICAR மதிப்பீட்டில், வெள்ளரியின் சேமிப்பு ஆயுள் சாதாரண சூழலில் 3 நாட்களிலிருந்து 14 நாட்கள் வரை அதிகரித்ததாகவும், இந்த அமைப்பின் செலவு சுமார் ரூ.3 லட்சம் மற்றும் ஆற்றல் பயன்பாடு சுமார் 1 kWh/tonne எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூரிய சக்தி குளிர்சாதனக் கிடங்குகள் – எதிர்காலத் தீர்வு

மின்சார வசதி குறைவாக உள்ள கிராமப்புறங்களில் சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்ட குளிர்சாதனக் கிடங்குகள் நல்ல மாற்றாக அமையலாம். ICAR–ன் சமீபத்திய ஒரு விவசாயிகள் சார்ந்த மாதிரியில், சூரிய சக்தி அடிப்படையிலான Pusa Farm SunFridge அமைப்பு அழுகக்கூடிய விளைபொருட்களை 4 – 15°C வெப்பநிலையில் சேமிக்க பயன்படுத்தப்பட்டு உள்ளது. அந்த மாதிரியில் சில பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய இழப்பு 70% வரை குறைந்ததாகவும், விவசாயிகளின்

வருமானம் 25 - 35% வரை அதிகரித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய தொழில்நுட்பங்கள் குறிப்பாக சிறு விவசாயிகள், விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் கிராமப்புறக் கூட்டுறவு அமைப்புகளுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

இழப்பைக் குறைக்க வேண்டிய நடவடிக்கைகள்

குளிர்சாதனச் சங்கிலியை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் அவசியம் :

அறுவடை செய்த உடனேயே முன்-குளிரூட்டல் செய்ய வேண்டும். கிராம அளவில் சிறிய குளிர்சாதனக் கிடங்குகள் அமைக்க வேண்டும். சூரிய சக்தி அடிப்படையிலான குளிர்சாதன வசதிகளை ஊக்குவிக்க வேண்டும்.

குளிரூட்டப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். விவசாயிகளுக்கு சரியான பொதியிடுதல் மற்றும் சேமிப்பு முறைகள் குறித்து பயிற்சி அளிக்க வேண்டும். IoT சென்சார்கள் மூலம் வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். உள்ளூர் சந்தைகள், பதப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுக்கு இடையே ஒருங்கிணைந்த விநியோகச் சங்கிலியை உருவாக்க வேண்டும்.

முடிவுரை

வேளாண் உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமே போதுமானதல்ல. உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருளை தரத்துடன் நுகர்வோரிடம் கொண்டு சேர்ப்பதும் மிகவும் முக்கியம். குளிர்சாதனச் சங்கிலி வசதிகள் இல்லாமை குறிப்பாக பழங்கள், காய்கறிகள் மற்றும் மலர்களில் அறுவடைக்குப் பிந்தைய இழப்பை அதிகரிக்கிறது.

அறுவடையில் தொடங்கும் குளிர் சாதனச் சங்கிலி விவசாயியின் வருமானத்தைப் பாதுகாக்கும் மதிப்புச் சங்கிலி என்ற அணுகுமுறையுடன் செயல்பட்டால் உணவு வீணாவதை குறைத்து, விவசாயிகளின் வருமானத்தையும் நுகர்வோருக்குக் கிடைக்கும் தரமான உணவையும் மேம்படுத்த முடியும்.

கட்டுரை ஆசிரியர் : *Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி.*


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333